ஜனசக்தி
மக்கள் நாளேடு

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

மலர் 73 இதழ் 058

விலைவாசி: தோளில் கிடக்கும் ஆடு!

த.ராசு

எப்போதும் இல்லாத அளவிலான இன்றைய விலைவாசி உயர்வுகள் நாடெங்கிலும் பெருவாரியான எண்ணிக்கையில் உள்ள நடுத்தர மற்றும் ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கையை மிகுந்த சோதனைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறது. சுகவாசிகளுக்கு இவ்வித அனுபவ உண்மைகள் சாியாகப் புலப்படுவது மில்லை, புாிவதுமில்லை. எங்கே, எப்படி என்றுதான் இவர்கள் கேட்பார்கள். ஆலமரத்தடி நிழலில் அமர்ந்திருப்போருக்குப் பாலையின் வெம்மைகள் உணரக் கூடியதாக இருப்பதில்லையே!

அந்நியர் ஆட்சிக் காலத்திலும், யுத்த காலங்களிலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு ஏழை மக்கள் பட்டினியால் பாிதவித்திருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதெல்லாம் உணவுப் பற்றாக்குறையினால் ஏற்பட்டிருக்கும் பாிதாபங்கள். இன்றைய நாட்களில் இங்கு ஏற்பட்டிருப்பதோ, உணவுப் பொருட்களை நமது அரசுகள் வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் கடனுக்குக் கையேந்தியாவது கையிருப்பில் வைத்திருக்கின்ற நிலையிலும், விலைவாசி உயர்வுகளால் வாங்கும் சக்திக் குறைவுக்கு மக்கள் அதிகம் தள்ளப்பட்டிருப்பதற்கு, தவறான முதலாளித்துவப் பொருளாதாரக் குளறுபடியின் விளைவே.

இதன் பின்னணிகள் யாவை, ஏறிய விலைகளைக் குறைப்பது எப்படி என்று, இதற்குப் பொறுப்பேற்க வேண்டிய மத்திய மாநில அரசுகள் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி ஆராயுகின்றன. மத்திய அரசு மாநில அரசுகளையும், மாநில அரசுகள் மத்திய அரசையும் கைகாட்டி, தத்தம் பொறுப்புகளிலிருந்து நழுவி மக்களைக் குழப்பிவிடப் பார்க்கின்றன. உண்மைக் காரணம், நாட்டையும் மக்களையும் வாழ்வித்து வழிநடத்த வேண்டிய அரசுகளின் அதிகார மையங்களான நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும், இந்திய அரசியல் சட்டத்தின் சமத்துவ சமுதாயக் கொள்கைக்கு எதிராக, தனிநபர் சொத்துக்களை ஒரு பக்கமாய்க் குவித்து சாதனை நிகழ்த்த முனைகின்ற பேராசையும், சுயநலமும் கொண்டவர்களும், அவ்வாறு முனைகின்றவர்களுக்கு ஆதரவானவர்களும் பெருவாரியாக இடம் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் பொறுப்பற்ற ஊழல் மயமான அரசியல் போக்குகள் வளர்ந்து ஊடுருவி விட்டிருப்பதுதான்.

அடுத்து, கட்சி வளர்ச்சிக்காக பெருமுதலாளிகளிடமும், சிறு தொழில் நடத்துகிறவர்களிடமும் முறைகேடாகப் பணம் வசூலிப்பது, ஒப்பந்ததாரரிடம் கமிஷன் பெறுவது, நீர், மணல் மற்றும் ரேஷன் பொருட்களைக் கடத்துவது, அரசு நிர்வாகத்தின் பல்வேறு மட்டங்களிலும் வேரோடிப் போயிருக்கும் லஞ்ச ஊழல்கள், ஒழுக்கத்தியும், உண்மையிலும், நேர்மையிலும் நம்பிக்கையற்றுப் போன நிலையில் பொது மக்களிடமும் பரவிப்போன குறுக்கு வழிப் போக்குகள் ஆகியவை அரசியல் மற்றும் சமூக வாழ்வில் சட்டபூர்வமில்லாத நடைமுறைகளாகி, மனித ரத்த நரம்புகளில் ஊடுருவிப் போயிருக்கும் பெருநோய்க்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளாமல், ஒத்தட சிகிச்சையில் காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பதுதான்.

இவற்றையெல்லாம் நெறிப்படுத்தி முற்றிலுமாகக் கட்டுக்குள் கொண்டுவர மனமில்லாமலோ, அல்லது கட்டுப்படுத்துவதற்கான நேர் வழிகளை வலுவான விதத்தில் வகுக்காமலோ நமது மைய அரசு பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்குள் அகப்பட்டு உறுதிபட செயல்பட முடியாதபடி இருக்கின்றது. பெருவாரியான மக்களை சோதனைக்குள் தள்ளியிருக்கும் உணவுப் பொருட்களின் விலைவாசிகள் கடந்த சில மாதங்களில் முறையான காரணங்களின்றி தாறுமாறாக ஏறிக்கொண்டு வந்திருப்பதில், எனக்கிதில் பொறுப்பில்லை - எனக்கொன்றும் தெரியாது என்பது போல், நமது மத்திய அரசு மாநிலங்களைக் கூட்டி காரணங்களைத் தேடுகின்றது.

கூட்டாட்சி அரசியல் சட்டத்தின்படி, ஆளுநர் பதவிகளின் மூலம் மாநில அரசுகளைக் கண்காணிக்கும் பொறுப்பும் அதிகாரமும் மத்திய அரசுக்குத் தரப்பட்டுள்ளன. மாநில அரசுகளே விலைவாசி உயர்வுக்குப் பொறுப்பென்றால், அவற்றைக் கண்காணிப்பதும், நெறிப்படுத்துவதும் சாியான வழியில் திசை திருப்பி வழிநடத்திச் செல்வதும் மத்திய அரசின் பொறுப்பு! ஆனால் இன்றைய நமது மத்திய அரசில் பெருவாரியாக இடமளிக்கப்பட்டிருக்கும் அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பெருவாரியான நடுத்தர - ஏழை மக்களின் பிரச்சனைகளை முன்னிறுத்தி, அவர்களுக்குாிய சமத்துவ வாழ்வாாிமைகளைப் பரட்டிப்போடும் கடுமையான விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கட்டமைப்பதற்கு நேரமோ, கவலையோ இல்லை!

"இது இவர்களுக்குப் போதும்; இவர்களை இந்த நிலையில் வைத்திருந்தால் தவறொன்றுமில்லை;

"இந்தியப் பற்று என்பது சற்றேனும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லாத வெளிநாட்டுப் பெரு நிறுவனங்களை, ஒரு பக்க வீக்கமாய் வளர்ந்து கொண்டு வரும் இந்தத் தேசத்தில், காய்கறி வியாபாரம் உட்பட பல்வேறு வியாபாரங்களைச் செய்ய அனுமதிக்கிற போது, அவர்களும் விலைவாசிகளைப் படிப்படியாக உயர்த்தி, கொள்ளை லாபம் அடைய முற்படுவார்கள்."

இவர்கள் இதைவிடக் கீழ் நிலைக்குச் சென்று விடாமல் உயிரோடு வாழும்படி பார்த்துக் கொள்கிறோமே, அதுவே ஒரு சாதனைதானே?" என்று இவர்கள் நினைக்கிறார்கள். சட்டத்துக்குப் புறம்பான தனியுடைமை சொத்துக் குவிப்புகளைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிற முதலாளித்துவமும், அதை ஆதாிப்பவர்களும் இப்படித்தானே நினைக்க முடியும்? சமத்துவச் சட்டத்தின் பிடித்திலே அமர்ந்துகொண்டு இப்படியெல்லாம் நினைப்பதும், செயல்படுத்துவதும்கூட தண்டனைக்குாிய ஒரு சட்டமீறல்தான்.

நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை உள்ளும் புறமும் அறிந்துகொள்வதற்குத் தேவையான சகலவிதமான கருவிகளையும் சாதனங்களையும் தனக்குள் கொண்டிருப்பதுதான் அரசு எந்திரம். மக்கள் நல வாழ்வு எனும் வட்டத்துக்குள் வந்து விழுகிற எந்த ஒரு புள்ளியானாலும் கறையானாலும் அந்தச் சுழற்சிப் பார்வைக்குத் தொியவில்லை, புாியவில்லை என்றால், அது தனது நிர்வாகக் குறைபாட்டை - பலவீனத்தை - வெளிப்படுத்த விரும்பாத ஒரு தன்னலமான எதேச்சதிகாரப் போய்மையையே வெளிப்படுத்துவதாக இருக்க முடியும்.

சர்க்கரை விலை உயர்வுக்கு குஜராத்தின் காண்ட்லா துறைமுகத்தில் இறக்குமதியாகி இருக்கும் 9 லட்சம் டன் கச்சா சர்க்கரையை நிறுவனங்கள் எடுத்துச் செல்லாததும், உத்தரப்பிரதேச அரசு அதை சுத்திகாித்துப் பயன்படுத்த நிறுவனங்களை அனுமதிக்காததுமே காரணம் என்று இந்திய உணவு அமைச்சர் சமீபத்தில் தொிவித்தார். மாநிலத்தில் கரும்பு அறுவடை சீசன் முடியட்டும் என்று உபி. அரசு எதிர்பார்த்ததுதான் அந்தத் தடைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

வெளிநாட்டு இறக்குமதியில் ஏற்பட்ட தாமதம்தான் விலை உயர்வுக்குக் காரணம் என்பதைவிட, மாநிலங்களின் தேவைக்கு ஏற்ப, கரும்பு விளைச்சலுக்கான முறையான பயிர்த் திட்டத்தை முன்கூட்டியே தீர்மானித்துச் செயல்படுவதில் தவறுகின்ற உள்நாட்டு அரசு நிர்வாகங்கள்தானே முதல் காரணமாக இருக்க முடியும்?

நீர்வளமும் நிலவளமும் நிறைந்திருக்கும் நமது ஒட்டுமொத்த இந்திய தேசத்தில், குடிக்கிற நீரை உணவுப் பொருளாகவும், வணிகப் பொருளாகவும் மாற்றி அறிவித்துப் பணம் சம்பாதிக்க வெளிநாட்டவர்க்கு உாிமை வழங்கி, அவர்களிடமிருந்து அதே நீரையும், அதன் மதிப்புக் கூட்டுப் பொருளான குளிர்பானங்களையும் இங்குள்ள மக்கள் அதிக விலை கொடுத்துப் பருகும்படியான ஒரு சூழலும், அவ்வாறே பயிர் விளைவிக்கக்கூடிய நிலப்பரப்புகளையும் வெளிநாட்டவர்க்கு வழங்கிவிட்டு, அங்கிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்து உண்பதுமான ஒரு சூழலும் இங்கே உருவாக்கி வைக்கப்பட்டுள்ளன. இது என்ன, சமத்துவத்தை உருவாக்கக்கூடிய மக்களாட்சிக்கான கொள்கையா அல்லது ஏற்றத்தாழ்வுகளை விாிவுபடுத்தக்கூடிய முதலாளித்துவத்துக்கான கொள்கையா?

இந்தியப் பற்று என்பது சற்றேனும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லாத வெளிநாட்டுப் பெரு நிறுவனங்களை, ஒரு பக்க வீக்கமாய் வளர்ந்து கொண்டு வரும் இந்தத் தேசத்தில், காய்கறி வியாபாரம் உட்பட பல்வேறு வியாபாரங்களைச் செய்ய அனுமதிக்கிற போது, அவர்களும் விலைவாசிகளைப் படிப்படியாக உயர்த்தி கொள்ளை லாபம் அடைய முற்படுவார்கள். அப்படியானால், ஆடு தோளில்தான் கிடக்கிறது என்பதை அறிந்திருந்தும் அதை ஊரெங்கும் தேடுவது போலவும், கண்ணாடி அணிந்து கொண்டிருந்தும் கூட கைப்புண் தொியவில்லை என்பது போலவும் நமது ஆட்சியாளர்கள் செயல்படுகிறார்கள் என்றால் இது ஒரு கைதேர்ந்த பாசாங்கு நாடகமே!

தவறுகள் இயல்பானவை. அவை குற்றங்களாவ தில்லை. ஆனால் தவறுகளை உணர்வதற்குக்கூட ஒரு தகுதியை வளர்த்திருக்க வேண்டியது அவசிய மாகிறது. அவ்வாறு உணராப்படும்போது தவறுகளைத் தாமதமின்றி திருத்திக்கொள்ள முன்வருவது தனிமனிதர்க்கு மட்டுமல்ல, அரசுக்கும் அழகு சேர்கிற ஒன்றுதான்

.(கட்டுரையாளர்: எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் தொடர்புக்கு: 044-22483363)

வாசகர் குரல்

முகவரி: ஆசிரியர், ஜனசக்தி, எஸ்.10, முதல்தளம், (டிராண்ஸ்கியர்ஸ் கம்பெனி மாடி) பேஸ்3, 11வது குறுக்குத் தெரு, திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை—32. தொலைபேசி: 044—22502447/48, நகல்: 044—43534530 Email : Editorial : janasakthieditor@gmail.com /Advt: info.janasakthi@gmail.com

முகமூடியைக் கிழித்தவர்

'சிந்தனைச் சிற்பியின் பங் களிப்பு (மார்ச் 10) என்ற துணைக்கட்டுரையை 'அனைசக்தி' வெளியிட்டு வரலாற்றுப் பெருமை பெற்றுக் கொண்டது. பொது வுடைமையை இந்தியாவில் நிர்மாணித்த ஜவரில் தலையாயவர். எஸ்.விகாட்டே, எஸ்.ஏ.டாங்கே போன்ற ஸ்தாபகர்கள். ஒப்பாரும் மிக்காரு மில்லா தத்துவ கொள்கை சிந்தனையாளர் என்னவோ இந்த நாடு சிங்காரவேலருக்குாிய மாண்மைக் காட்டிடவில்லை. போற்றிட வில்லை. அறிஞர்கள் உயர் வகுப்பில்தான் பிறப் பார்கள் என்ற பொய்யான முகமூடியைக் கிழித்தவர்கள் சிங்காரவேலர், பெரியார், அம்பேத்கர் போன்றோர். தாழ்ந்த சமூகத்தில் பிறந்த பேரறிஞர்கள் என்பதால் நாடு ஏற்றிடவில்லை. இந்த மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டும். இதற்குப் பொதுவுடைமை இயக்கம் உழைக்க வேண்டும். பொது வுடைமை சம மாியாதை சமத்துவத் திற்குப் பாடுபட்டவரை இன்றைய இளைஞர்கள் அறிய செய்ய வேண்டும். அவர் சாியில் பங்கெடுத்தவர்கள் 11 பேர் மட்டுமே.

அன்பு இராசப்பா
சீர்காழி

கடமை உணர்த்திய கட்டுரை

மீனா சுந்தர்-ன் 'குழந்தையும் படைப்பு மனமும்' கட்டுரை, (மார்ச் 11) வளர்ச்சியால் மாற்றம் கண்டுவரும் மனித சமூகத்தில், பகுமரமாக தங்களை உருவாக்கி வளர்ச்சி பெறும் குழந்தைகளின் உள்ளத்தில் நல்ல சிந்தனைகளையும், எண்ணப் பிரவாகங்களையும் பதிவு செய்ய வேண்டியது நமது கடமை என்பதை கட்டுரை ஆசிாியர் தனக்கே உாித்தான புதிய சிந்தனைகளை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். கணினியோடு வலக்கும் குழந்தைகள் கலை இலக்கியப் படைப்புகளையும் ஸையாளுகின்றனர். விகிதாச்சாரம் குறைவு நாம் நடந்தால், குழந்தை தேர் நடக்கும் என்பதை நாம் உணர்ந்து பயணிப் போம், படைப்புமனம் கொண்ட குழந்தை களை உருவாக்குவோம்.

பெ.ஆதிமூலம்
மாணாமதுரை

'உலகம் சுற்றும் தமிழன்'

தமது இருபதாவது வயதில் மியான்மரின் (பர்மா) தலைநகரமான ரங்கூனில் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் வெளியிடப்பட்ட 'தனவணிகன்' என்ற இதழுக்கு ஏ.கே.செட்டியார் ஆசிாியராகப் பணிபுாிந்தார். புகைப்படக் கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, 1930ல் ஜப்பான் சென்று 'இம்பாியல் ஆர்ட்ஸ் கலாசாலை'யில் சேர்ந்து புகைப்படக் கலையில் தேர்ச்சி பெற்றார். அவர் ஜப்பான் நாட்டில் தாம் கண்ட காட்சிகளையும், பெற்ற அனுபவங்களையும் கட்டுரைகளாக வரைந்து 'தனவணிகன்' இதழுக்கு அனுப்பினார். இதழில் வெளியிடப் பட்ட அவரது பயணக் கட்டுரைகள் படிப்போாின் உள்ளத்தைக் கவர்ந்தது. அக்கட்டுரைகள் தொகுக்கப் பெற்று 'ஜப்பானில் சில நாட்கள்' என்னும் நூலாக வெளியிடப்பட்டது. இது தான் அவரது முதல் நூல்.

ஜப்பானிய புகைப்படக் கலையைப் பயின்ற செட்டியார் மேல்பயிற்சிக்காக அமொிக்கா சென்று நியூயார்க்கிலுள்ள 'ஃபோட்டோ ரிராபிக்ஸ் இன்ஸ்டியூட்டில்' சேர்ந்து பட்டயப் படிப்பில் (டிப்ளமோ) தேர்ச்சியடைந்தார். படிப்பு முடிந்து இந்தியா திரும்புகையில் இங்கிலாந்து, அயர்லாந்து, ஜொ்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்று வந்தார். இந்தப் பயண அனுபவங்களைக் கட்டுரைகளாக வெளியிட்டார். அக்கட்டுரைகள் பின்னர் 'உலகம் சுற்றும் தமிழன்' என்னும் பெயாில் நூலாக 1940ல் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு ஏகேசெட்டியார் உலகம் சுற்றும் தமிழன்' என்றே மக்களால் அழைக்கப் பட்டார். பெயருக்கேற்ப, தம் வாழ் நாளில் அவர் சுமார் நான்கு லட்சம் மைல்களுக்கு மேல் பயணம் செய்துள் ளார்.

அவரது நூல்களிலேயே அதிகமான பதிப்புகள் வெளிவந்த நூல், 'உலகம் சுற்றும் தமிழன்'! அந்த நூல் மாணவர்களுக்குப் பாட நூலாகவும் வைக்கப் பட்டது. பல பதிப்புகள் வெளியிடப் பட்டு பதிப்புத்துறையில் ஒரு சாதனை புாிந்தது.

ஏ.கே.செட்டியாாின் பயண நூல்கள் எளிமையும், தெளிவும் கொண்டு விளங்குபவை. அவர் தேவைக்கு மேல் எதுவும் எழுதுவதில்லை. மேலும், மனிதப் பண்பு, மனித நேயம் என்பவை களையே முன்னிறுத்தி அவரது எழுத்துக்கள் அமைந்துள்ளன.

'உலகம் சுற்றும் தமிழன்', 'மலேயா முதல் கனடா வரை', 'பிராயாண நிலவுகள்', 'கயானா முதல் காஸ்டியன் கடல்வரை', 'அமொிக்கா நாட்டிலே', 'ஜரோப்பா வழியாக', 'குடகு' முதலிய சிறந்த நூல்களைத் தமிழ் மக்களுக்கு அளித்துள்ளார்.

'குமாிமலர்' என்னும் தன்னுடைய இதழில் 1943ல் தமது முதல் பயணக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். 'குமாி மலர்' இதழில் எஸ்.வையாபுாிப் பிள்ளை, டி.கே.சி., கி.சந்திரசேகரன் முதலியவர்களின் கட்டுரைகளையும், இராஜாஜி, வ.வே.சு. ஐயர், ஆ.மாதவையா, எஸ்.சத்தியமூர்த்தி, சுப்பராஜ கோபாலன், க.நா.சுப்பிரமணியன் முதலியவர்களின் சிறுகதைகளையும் வெளியிட்டார். சுமார் நாற்பது ஆண்டுகள் 'குமாி மலர்' இதழ் வெளிவந்து மக்களின் சிந்தனையைத் தூண்டியது.

மேலும், ஏ.கேசெட்டியார், தமிழ்த் தாத்தா உ.வே.சா. போலவே பல ஊர்களுக்குப் பயணம் செய்து, பல வீடுகளில் பரண்களின் மீது கிடந்த நூல்களைச் சேகாித்து, அவற்றில் மக்களுக்குத் தேவையானவற்றை 'குமாி மலர்' இதழில் வெளியிட்டார்.

டாக்குமெண்டாி (Documentary) என்னும் 'ஆவணத் திரைப்படத்தைத்' தமிழகத்திற்கு முதன்முதலாக அறிமுகப் படுத்திய பெருமை, ஏ.கே.செட்டியாரைச் சாரும்!

மகாத்மா காந்தியைப் பற்றி விளக்கப்படம் எடுக்க விரும்பிய ஏ.கே.செட்டியார், நேரில், டர்பன் முதலிய தென்ஆப்பிாிக்க நாடுகளுக்குச் சென்று பல இடங்களில் படம் பிடித்தார்.

போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத அக்காலத்திலேயே, சுமார் பத்தாயிரம் மைல்கள் பயணம் செய்து, இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களைத் தேடிப்பிடித்துக் குறிப்புகள் எடுத்து, ஐம்பது ஆயிரம் அடி நீளம் வரை டாக்குமெண்டாிப் படத்தை எடுத்தார். அதன்பின் அப்படத்தை ஹாலிவுட்டில் எடிட்டிங் செய்து சுருக்கி, அதற்கு ஆங்கில விளக்கவுரையையும் இணைத்தார்.

அப்படத்தில் மகாத்மாவுடன் பழகிய பலரும் இடம் பெற்றுள்ளனர். அந்த டாக்குமெண்டாிப் படத்தைப் பலர் அதிகத் தொகைக்குக் கேட்டும் அவர் தரவில்லை. அப்படத்தை இந்திய அரசிடமே ஒப்படைத்துவிட்டார் என்பது வரலாற்றுச் செய்தி!

-பி.தயாளன்

சாிந்தீரம் பேசுகிறது...

சான்றோர் சொல்

"கனவுகளை எண்ணங்களாகவும், எண்ணங்களைச் செயல்களாகவும் மாற்றுக."

-அப்துல்கலாம்

கல்வித்துறையிலும் அந்நிய ஊடுருவல்

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் என்ற உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனத்தின் சூத்திரம், தொழில்களிலும் வர்த்த கத்திலும் மட்டுமின்றி, அனைத்துத்துறைகளிலும் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. இந்த சூத்திரத்தின் விஷக்கரங்கள் இப்போது கல்வித் துறையையும் தீண்டப்போகிறது. இதற்கான அனுமதியை மார்ச் -15 அன்று மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இடை வேளைக்குப் பின் இதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

ஏற்கனவே, இந்திய நாட்டில் கல்வித் துறையில் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. அரசு நடத்தும் கல்வி நிலையங்கள், தனியார் நடத்தும் கல்வி நிலையங்கள் எனத் தொடங்கி, கல்வித்துறையில் வளர்ச்சி என்ற பெயரில் நிகர்நிலை பல்கலைக்கழகங் கள் வரை வந்துள்ளன. இந்த நிகர்நிலை பல்கலைக் கழகங்களில் சில, நல்ல முறையில் செயல்பட்டு, மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி வருகின்றன. ஆனால் பல நிகர் நிலைப் பல்கலைக் கழகங்கள் திருப்திகரமான நிலையில் செயல்பட வில்லை என்பது அண்மையில் வெளிப்பட்டது.

இத்தகைய சூழலில்தான் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களை இந்தியாவில் செயல்படச் செய்ய மத்திய அமைச்சரவை பட்டுக்கம்பளம் விாிக்க முடிவெடுத்துள்ளது. அமைச்சரவை முடிவெடுத்தது மார்ச்-15ம் நாள். ஆனால், அமொிக்க நாட்டின் அட்லாண்டாவில் இயங்கி வரும் ஜார்ஜியா டெக் பல்கலைக்கழகம் 2008ம் ஆண்டிலேயே ஐதராபாத்தில் 250 ஏக்கர் நிலம் வாங்கி விட்டது.

எனவே, இந்தியாவின் கல்வியை உலகத்தரத்திற்கு உயர்த்துவதற்கென இந்திய அரசு முடிவு செய்யும் முன்பே அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆர்வம் காட்டியதா? அல்லது இப்படி ஒரு முடிவை இந்திய அரசு எடுக்கும் என்று முன்கூட்டியே அறிந்து இடைத்தரகர் யாராவது இத்தகைய பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் கால்பதிக்க ஏற்பாடு செய்தார்களா? என்பது தொியவில்லை.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டுகள் பலவாகப் போராடிப்பெற்ற இடஒதுக்கீடு இந்த அன்னிய பல்கலைக் கழகங்களில் அமலுக்கு வராது எனவும் செய்திகள் வெளிவருகின்றன. இது சமூக நீதித் தத்துவத்திற்கே வேட்டு வைக்கும் செயலாகும். மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள தி.மு.க.வினர் இதற்கு எப்படி ஒப்புக் கொண்டார்கள் என்பதை தி.மு.க. தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த அன்னியப் பல்கலைக்கழகங்களில் பயில இருக்கும் மாணவர்கள் உயர்ஜாதியைச் சார்ந்த அவர்களிலும் பெரும் பணம் படைத்த குடும்பத்தைச் சார்ந்தோர்களாகவே இருப்பார்கள்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பகுதியினருக்கும் சமூக ரீதியாக பின்தங்கியவர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவாகும்.